உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.45/2024

பெயர் :சிவராமன்(அ.சா.1)
தகப்பனார் பெயர் :துரைச்சாமி
கணவர் பெயர் :
வயது :45
கிராமம் :தமராக்கிவடக்கு
வட்டம் :சிவகங்கை
தொழில் :விவசாயம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

01.04.2026

முதல் விசாரணை:

என் உடன்பிறந்த சகோதரர் செந்தில்குமார் என்றால் சரிதான். அவரது மனைவி பெயர் தவமணி என்றால் சரிதான். என்ன வழக்கிற்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று எனக்கு தெரியும். என் அண்ணியின் உடைய கைப்பேசியை பறித்து கொண்டு சென்றுவிட்டார்கள். அது தொடர்பாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு கொட்டக்குடி கோவில் விலக்கு அருகே மாலை சுமார் 6.00 மணியளவில் என் அண்ணன் செந்தில்குமார் மற்றும் என் அண்ணி தவமணி ஆகியோரின் கைப்பேசியை அடித்து பறித்து சென்றுவிட்டார்கள். இதுதொடர்பாக என் அண்ணன் எனக்கு தகவல் போன் மூலமாக கொடுத்தார். மறுநாள் இதுதொடர்பாக நான் மேலூர் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். சாட்சியிடம் மேற்படி புகார் காட்டப்படடு அதை தனக்கு படிக்க தெரியாது என்றும் ஆனால் அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சி ஒப்புகொள்ளவே மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. கைப்பேசி எண்ணை பறித்து சென்றது தொடர்பாக புகார் அளிக்க சென்றிருந்தோம் இதுதொடர்பாக கையெழுத்து செய்யவேண்டும் என்று சொன்னார்கள் நான் கையெழுத்து போட்டேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

என் அண்ணன் செந்தில்குமாரும், அவரது மனைவியான தவமணியும் 04.11.2020 அன்று மேலூர் மருத்துவமனைக்கு சென்று திரும்பி வந்து கொண்டிருந்தரார்கள் என்றும் அவ்வாறு வரும்போது இரவு சுமார் 8.40 மணியளவில் திருவாதவூர்-மேலூர் பட்டதரசியம்மன் கோவில் அருகே வந்த போது அவர்களின் செல்போனை பறித்து சென்றதாகவும், அவர்கள் மீது புகார் கொடுக்க மறுநாள் 05.11.2020ம் தேதி நானும், எனது சகோதரரும் மற்ற உள்ளுர்காரர்களும் மேலூர் பஸ்ஸ்டாண்டு அருகே உள்ள சகௌசிக் ஓட்டல் அருகே நின்று கொண்டிருந்த போது TN59CY0670 என்ற பதிவு எண் கொண்ட splendor இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களை பார்த்ததும் செந்தில்குமார் அவர்களை செல்போனை பறித்து சென்ற நபர் என்று அடையாளம் காட்டவே, மேற்படி இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் என்னையும் என் அண்ணனையும் தரக்குறைவாக பேசி, அதில் ஒருவர் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து என் அண்ணனை வெட்டவர நான் அவரை பிடித்து இழுத்து அவரை காப்பாற்றியுள்ளேன் என்றும், சாட்சியிடம் மேற்படி அரிவாள் காட்டப்பட்டு சாட்சி அதை பார்வையிட்டு அந்த அரிவாளை பார்த்தில்லை என்று கூறுகிறார். நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அவ்வாறு அரிவாளை கொண்டு என் அண்ணனை வெட்ட வரும்போது நான் தான் காப்பாற்றியுள்ளேன் என்றும் என்னை மீண்டும் கத்தியை கொண்டு எத்தனித்தவரை நான தடுத்துவிட்ே◌ன் என்றால் சரியல்ல. இதை பார்த்த பொதுமக்கள் அலறியடைத்து ஓடவே கடைகள் அடைக்கப்பட்டது என்று நானும் எனது உறவினரும் அவரை பிடிக்க எத்தனித்தபோது, நேற்றே சொன்னோம்ல கம்ப்ளைண்ட் கொடுக்கக்கூடாது என்று சொல்லி அவர்கள் தப்பித்து செல்லவும் மேற்படி நபர்களை விசாரித்த போது மேலூர் கொட்டக்குடியை

சேர்ந்த மாயாண்டி மகன் M.S பிரபா என்ற பிரபாகரன் என்பதும் மறறொருவர் ஆண்டிப்பட்டியை சேர்ந்த ஆனை மகன் முனிச்சாமி என்று தெரிந்து மேலூார் காவல்நிலையத்தில் புகார் அளித்து மேற்படி புகாரில் எனது சகோதரர் செந்தில்குமாருடன் சாட்சி கையெழுத்து இட்டுவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் தங்கள் அருகில் உள்ள ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுடன் சமரசம் ஆகி போலிசார் விசாரணையில் உண்மையை சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.04.01 16:55:25 +0530

Assistant Sessions Judge

Melur